28640

உ

கடவுள் துணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

# நன்னெறி மூலமும் உரையும்.

௯-ம். பதிப்பு.

V. B. SUBRAMANIYASARMA
TAMIL PANDIT.

288 THAMBOO CHETTY ST. MADRAS

இஃது
ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரால்
கலாரத்நாகரம்
என்னும் தமது அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை:

1902.

9-1000.

கடவுள் துணை.

# சிவப்பிரகாச சுவாமிகள்

## சரித்திரச்சுருக்கம்.

காஞ்சீபுரத்திலே ஏறக்குறைய இருநூற்றெண்பது வருடங்களுக்கு முன் தொண்டைமண்டல வேளாளர்களுக்குத் தீக்ஷா குருவாய்க் குமாரசுவாமிதேசிகர் என்பவர் ஒருவரிருந்தார். அவருடைய புத்திரர்கள் மூவரில் முதல்வராகிய சிவப்பிரகாச சுவாமிகள் கல்வி பயின்றுவந்த இளமைப் பருவத்திலேயே தந்தையார் சிவலிங்கையிக்கியமானபடியால் தாம் பேரிலக்கணங் கற்க விரும்பித் தம்பியர்களுடன்புறப்பட்டு வாலிகண்டாபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கல மென்னுங் கிராமத்திற்போய் ஓர் நந்தவனத்திற் சிவபூசை செய்துகொண்டிருந்தனர். அக் கிராமாதிபதியாகிய அண்ணாமலைரெட்டியார் வேண்டுகோளின்படி அவரால் அவ்விடத்தில் கட்டுவிக்கப்பட்ட மடத்தில் இரண்டு வருஷகாலம் வசித்துக்கொண்டிருந்தனர். பின்பு தாம் கொண்டகருத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பிரயாணப்பட்ட அப்போது ரெட்டியார் கொடுத்த ௩00-பொன்னைப் பெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுத் திருநெல்வேலி சேர்ந்து தாமிரபர்ணி தீரத்திலுள்ள சிந்துபூந்துறையில் தருமபுராதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகள் கல்விகேள்விகளால் மிகச் சிறந்தவரென வறிந்து, அவரை அணுகித் தமக்கு இலக்கண விலக்கியங்கள் போதிக்கும்படி வேண்ட, அவர் இவ

ரடைந்துள்ள கல்வியளவை அறிய விரும்பி "கு" என்னும் எழுத்து ஆதியந்தமாயும் "ஊருடையான்" என்னுஞ் சொல் மத்தியில் அமைந்திருப்பதாயும் ஒரு வெண்பாப்பாடுக எனச் சொல்ல, சுவாமிகள்

### நேரிசைவெண்பா.

குடக்கோடு வானெயிறு கொண்டார்க் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
ஊருடையா னென்னு முலகு.

என்னும் இவ்வெண்பாவைப் பாடினர். இதை அவர் கேட்டு "வடக்கோடு தேருடையான்" என்று அமைக்கப் பெற்றமையை மிகமகிழ்ந்து சுவாமிகளைத் தழுவி உடனிருத்தித் தாம் அடைந் திருக்கிற கல்வியினுந் திறமுள்ளவரென வெண்ணிச் சுவாமிக ளின் சகோதரர்கட்குப் பஞ்ச இலக்கணங்களையும் போதித்தனர்

இப்படித் தம்பியர்கள் கல்வி பயின்றபின் தாம் ரெட்டியா ரிடம் பெற்ற ௩00-பொன்னையும் அவர்கள் குருதட்சணையாகக் கொடுக்க முயலுகையில், தம்பிரான் பொன்னை ஏற்றுக்கொள் ளாமல் "திருச்செந்தூரில் வசிப்பவரும் எம்மை அலக்ஷியஞ் செய்து நடப்பவருமாகிய ஓர் புலவரிடஞ் சென்று அவரைக் கல்விகேள்விகளால் வென்றுவந்தால் அதுவே போதுமான குரு தக்ஷிணையாகும்" என, இதைக் கேட்டு மிகக்களிப்புடன் சென் று, திருச்செந்தூரை யடைந்து, கோயிலில் வாசஞ்செய்திருந்த ப்புலவரைச் சுவாமிகள்கண்டு, தாம் வந்தகாரணத்தைத் தெ

ரிவித்துவாதுக்கழைத்தனர். அப்போது இருவருக்கும் ஏற்பட்ட நிபந்தனைப்படி குறித்த காலத்தில் நிரோட்டக யமகவந்தாதியாக ௩௦-பாக்கள் செய்யச் சக்தியற்றவராய்ப் புலவர் நிற்க, தாம் அவ்வந்தாதியை முடித்து, அப்புலவரைத் தமக்கு முறியாக்கிக்கொண்டு, திருச்செந்துறைவிட்டு நீங்கிச் சிந்துபூந்துறையை யடைந்து, தம்பிரானிடத்தில் முறியை ஒப்புவித்து, அவர் விடைதரப்பெற்றுத் திருமங்கலத்திலுள்ள தமது மடம்போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் வாழுங்கால் இவரது கல்விச் சிறப்பானது பலபக்கங்களிலும் பரவிப் பலரையும் இவர் மடத்தை அடைவித்தது.

இப்படியாகக் கழிந்துவரும் இவருடைய வாழ்நாட்களின் பிற்பாகம் வேதாந்த விசாரணையிலும், அதைக் காருண்ணியத்தால் பலநூல் ரூபகமாகச் சனங்களுக்குத் திரட்டிக் கொடுப்பதிலுஞ் சென்றது. இச்சமயோபகாரஞ் செய்துவருகிற நாட்களில் தமது ஞானாசாரியராகிய பொம்மைய பாளயத்தில் எழுந்தருளியிருந்த சிவஞான பாலைய சுவாமிகளைத் தரிசித்து, அவர்கள் பேரில் பிள்ளைத்தமிழ் முதலிய அநேக பிரபந்தங்களியற்றி அரங்கேற்றி, அந்தப் பொம்மைய பாளயத்திற் கடுத்த நல்லாத்தூரில் ௩௨-வது வயதில் சிவசாயுச்சியம் அடைந்தனர்.

இவர் துறவறமே மிகச் சிறப்புடையதென்கிற கொள்கையுடையவர். ஒருநாள் அண்ணாமலைரெட்டியார் இவரை மணம்புரிந்து இல்லறம் நடாத்தும்படிக்கு வேண்ட அதற்குப் "பெண்ணைப் புணர்வதிலும் பேயைப்புணர்வேன்" எனக் கடிந்து சொல்லினர்.

இவர் நூல்கள் செய்வதில் மிகத் திறமுடையவர். இதனடியில் குறித்த இலக்கணமமைந்த நூற்கள் பலவும் இவரே செய்தனரென்று சொல்லப்படுகின்றன. அவைகள் வருமாறு:—

௧. பிரபுலிங்கலீலை, ௨. திருக்கூவப்புராணம், ௩. சித்தாந்த சிகாமணி, ௪. வேதாந்தசூடாமணி, ௫. சிவப்பிரகாசவிகாசம், ௬. சிவநாமமகிமை. ௭. தர்க்கபரிபாஷை, ௮. சோணசைலமாலை, ௯. வெங்கைக்கலம்பகம், ௧௦. வெங்கைக்கோவை, ௧௧. வெங்கையுலா, ௧௨. வெங்கையலங்காரம், ௧௩. திருச்செந்திலந்தாதி, ௧௪. சதமணிமாலை, ௧௫. நால்வர்நான்மணிமாலை, ௧௬. நிரஞ்சனமாலை, ௧௭. கைத்தலமாலை, ௧௮. அபிஷேகமாலை, ௧௯. இஷ்டலிங்கப் பெருங்கழிநெடில் விருத்தம், ௨௦. இஷ்டலிங்கக் குறுங்கழிநெடில் விருத்தம், ௨௧. நன்னெறி, ௨௨. பெரியநாயகி விருத்தம், ௨௩. பெரியநாயகி கட்டளைக்கலித்துறை, ௨௪. பிக்ஷாடன நவமணிமாலை.

மேலும் சிவப்பிரகாச சுவாமிகள் தெற்குத்தேயத்தில் சைவ சமயாசாரியர்களாகிய மூவர் பாடல் பெற்ற ஒரு திவ்விய ஸ்தலத்தின்பேரில் தோத்திரப்பாக்களும் செய்தருளினார்.

சிவப்பிரகாச சுவாமிகள் தமக்கு முன் ஐக்கியமான முதற் சகோதரராகிய கருணைப்பிரகாச சுவாமிகளால் ஸ்ரீகாளத்தி புராணம் ஆரம்பிக்கப்பட்டுப் பின்பு தம்மாலும் அது பூர்த்தி யாகாமல் தமது இரண்டாவது சகோதரராகிய வேலப்ப சுவாமிகளால் நிறைவேறிற்றென்றும் இந்த வேலப்ப சுவாமிகள் பேரூர்ப்புராணமுதலிய சிலநூல்கள் செய்தனரென்றுஞ் சொல்லுகிறார்கள்.

கடவுள் துணை!

# நன்னெறி மூலமும் உரையும்.

## காப்பு.

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

மின் எறி சடாமுடி { மின்னலை வீசுகின்ற சடைமுடியை யுடைய

விநாயகன் அடி தொழ - விநாயகமூர்த்தியின் பாதங்களை வணங்க

நன்னெறிவெண்பா - நன்னெறி என்னும் நூலிலுள்ள வெண்பா

நாற்பதும் வரும் நாற்பதும் வரும்.

ஏ - அசை.

(கருத்துரை.) விநாயகர் பாதங்களை வணங்க நன்னெறி என்னும் இந்நூல் இனிதுமுடியும்.

## நூல்.

என்று முகம னியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்-துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து.

## பதவுரை.

| | |
|---|---|
| பூவிற் பொலி குழலாய் | பூவினால் பிரகாசிக்கின்ற கூந்தலையுடையவளே! |
| பூங்கை புகழவோ | அழகிய கையானது தன்னைப் புகழவோ |
| துன்று சுவை | (மதுரம்) பொருந்திய உணவை |
| நாவிற்கு நயந்து உதவும் | நாவினுக்கு விரும்பிக் கொடுக்கும்; |
| (அதுபோல) | |
| என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும் | எப்போதும் உபசார மொழிகளைச் சொல்லாதவரிடத்திலும் |
| தீது அற்றோர் | குற்றம் நீங்கியவர் [பெரியோர்] |
| சென்று பொருள் கொடுப்பர் | போய் (கிடைத்த) பொருளைத் தருவர். |

எ-ப்—தீதற்றோர்; ப-லை—கொடுப்பர்; செ-ள்—பொருள்.

(க-ரை.) பெரியோர் உபசாரவார்த்தை பேசாதவர்க்கும் பொருள் கொடுப்பர். (௭)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

| | |
|---|---|
| நன்னுதால் | நல்ல நெற்றியையுடையவளே! |
| ஈசற்கு | சிவபெருமானுக்கு |
| நல்லோன் | நற்குணமுள்ளவராகிய சாக்கியநாயனா |

| | |
|---|---|
| எறி சிலையோ | (அன்பொடு) எறிந்த கல்லோ (அல்லது) |
| ஒள் கருப்பு வில் கோன் மலரோ | ஒளிபொருந்திய கருப்பு வில்லை யுடைய மன்மதன் (அன்பின்றியெறிந்த) புட்பபாணமோ |
| விருப்பு | விருப்பத்தைக் கொடுத்தது? |

(அவற்றுட் கல் விருப்பும் மலர் வெறுப்பும் ஆனதுபோல)

| | |
|---|---|
| மாசு அற்ற நெஞ்சு உடையார் | குற்றம் தீர்ந்த மனமுடையோரது |

வன் சொல் இனிது – கடிய சொல்லும் இனியதாகும்;

| | |
|---|---|
| ஏனையவர் பேசுற்ற இன் சொல் | (அவர்களுக்கு வேறானவர்) தீயோர் சொல்லிய இனியசொல்லும் |
| பிறிது என்க | துன்பந் தரும் என்றறிக. |

தோ-எ-ய்—ரீ ; ப-லை—பிறிதென்க.

(க - ரை.) நல்லமனமுடையார் கடுஞ்சொல் இன்பமும், தீய நினைவுடையார் இன்சொல் துன்பமுந் தரும். (உ)

**தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்**
**தங்கட் குரியவராற் றாங்கொள்க - தங்கநெடுங்**
**குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்**
**கன்றினாற் கொள்ப கறந்து.**

| | |
|---|---|
| நெடு தங்கம் குன்றினால் | நெடிய பொன் மலையால் |
| செய்தது அனைய கொங்கையாய் | செய்ததை யொத்த கொங்கையை யுடையவளே! |
| ஆவின் பால் | பசுவின் பாலை |

நன்றினால் (அதன்) கன்றைக்கொண்டு
மறந்து கொள்ப கறந்து கொள்வார்; (அதுபோல)
தங்கட்குதவிலாரைக-தங்களுக்குக் கொடாதவர் கையிலிருந்து
தாம் ஒன்று கொள்ளின் } தாம் ஒருபொருளைப் பெற நினைக்கின்
அவர் தங்கட்கு உரிபவரால் } அவர்க்கு நண்பரால்
தாம் கொள்க தாம் (அப்பொருளைப்) பெறக்கடவர்.

எ-ப்—தாம்; ப-லை—கொள்க; தே-செ-ள்—அவ்வொன்றை.

(க - ரை.) தமக்குக் கொடாதவரிடத்தில் ஒருபொருளைப் பெறவேண்டின் அவர் சிநேகரா லதனை பெறக்கடவர். (௯)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

பிறர்க்கு உதவி செய்யாத கருங்கடல் நீர் } பிறருக்கு உதவி செய்யாத கரிய கடலிலுள்ள நீரை
புடல் சென்று முகந்து - மேகம் சென்று மொண்டுவந்து
பிறர்க்கு பெய்யா கொடுக்கும் } உலகத்தவர்க்குப் பெய்து தரும் (அது போல)
பிறர்க்கு உதவி செய்யார் } பிறருக்குச் சகாயம் செய்யாரது
பெரு செல்வம் வேறு } மிகுந்த செல்வமானது வேறுயிருக்கினும்

| | |
|---|---|
| பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறும் | அயலார்க்கு உதவி செய்பவரது செல்வமாம். |

எ-ய்—செல்வம் ; ப-லை—பேறும்

(க - ரை.) உதவிசெய்கிறவர் செல்வம் அன்னியருடையதே யாயினும் உபகரிப்போர் செல்வமாகவே குறிக்கப்படும். (௬)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

| | |
|---|---|
| பூ குழலாய் | பூக்களை (முடித்த) கூந்தலையுடையவளே! |
| நெல்லில் உமி | நெல்லிலிருந்து உமியானது |
| சிறிது நீங்கி | சிறிது விலகி |
| பழமைபோல் புல்லினும் | முன்போலவே சேரினும் |
| திண்மைநிலை போம் | (அது முளைத்தற் காதாரமாக விருந்த) வலிமைநிலைகெட்டுப்போம்(அதுபோல) |
| நீக்கம் அறும் இருவர் - பிரிவு அற்ற (சிநேகர்) இருவர் | |
| நீங்கி புணர்ந்தாலும் - (பகைத்துச்சிறிதுகாலம்) நீங்கிக்கூடினும் | |
| நோக்கின் | பார்க்குமிடத்து |
| அவர் பெருமை நொய்து ஆகும் | அச்சிநேகரின் பெருமை அற்பத்தன்மையதாகும். |

எ-ய்—பெருமை ; ப-லை—நொய்தாகும்.

(க - ரை.) பிரிந்து கூடுஞ் சிநேகம் பழைய ஒருமையை யுடைத்தா யிராது. (௭)

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே - யோதுகலை [கரூன்
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

| | |
|---|---|
| ஓது | புகழப்பட்ட |
| எண் இரண்டு கலை ஒன்றும் | பதினாறு கலைகளும் சேர்ந்த |
| மதி என் முகத்தாய் | சந்திரன் என்று சொல்லப்படும் முகத்தை யுடையவளே! |
| கண் இரண்டும் | இரண்டு கண்களும் |
| ஒன்றையே | (தமக்குள் வேறுபடாமல்) ஒரு பொருளையே |
| நோக்கல் | ஒத்துப்பார்த்தலை |
| காண் | நீ பார்; (அதுபோல) |
| காதல் மனையாளும் காதலனும் | அன்புள்ள மனைவியும் நாயகனும் |
| மாறு இன்றி | (தம்முள்) மாறுபாடில்லாமல் |
| தீது இல் ஒரு கருமம் செய்ப | தீமை இல்லாத ஒரு தொழிலைச்செய்வர். |

தான் - ஏ - அசைகள்.

எ - ய்—மனையாளும், காதலனும்; ப-லை—செய்ப; செ-ன்—கருமம்.

(க - ரை.) கணவனும் மனைவியும் ம[redacted]ருமித்துச் செய்யும் அறமே நிறைவேறும். (க)

கடலே யனையம்யாங் கல்வியா லென்று
மடலே றனையசெருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

| | |
|---|---|
| முழங்கும் பனி கடலும் | ஒலிக்கின்ற குளிர்ந்த கடலும் |
| முனிக்கு அரசு கையால் | முனிவர்க்குத் தலைவரான அகத்திய முனிவரது கையினால் |
| முகந்து உண்ணப் படும் | மொண்டு புசிக்கப்படும்; |

{ அதுபோலப் புலவர்களே! ஒரு சிறுவனும் உம்மை ஒரு சிறிய சொல்லைக்கொண்டு வெல்லுவான் ஆதலால், }

| | |
|---|---|
| யாம் கல்வியால் | நாம் கல்வி நிறைவால் |
| கடல் அனையம் என்னும் | கடலை ஒத்தனம் என்கிற |
| அடல் ஏறு அனைய செருக்கு | வலிமையை யுடைய ஆண்சிங்கத்தின் செருக்கையொத்த கர்வத்திலே |
| ஆழ்த்தி விடல் | (உங்களை) அமிழ்த்திவிடா திருங்கள். |

ஏ - அசை.

தோ-எ-ய்,—யாரும்; ப-லை—ஆழ்த்திவிடல்.

(க - ரை.) கல்வியிற் சிறந்தவர்களென்று யாரும் கர்வங் கொள்ளலாகாது. (எ)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

வெள்ளம் தடுத்தல் அரிதோ } வெள்ளத்தை (கரைகட்டி)த்தடைசெய்தல் அருமையோ?

தடம் கரை — விசாலமான கரையை

பேர்த்து விடுத்தல் அரிதோ } உடைத்து (அவ்வெள்ளத்தை) ப்புறத்தே செலுத்தல் அருமையோ?

விளம்பு — (நீ) சொல்;

(தடுத்தல் அருமைபோல)

உள்ளம் கவர்ந்து எழுந்து } மனதைத் தன்வசமாக்கி எழுந்து

ஓங்கு சினம் — வளருகிற கோபத்தை

காத்துக் கொள்ளும் குணமே } அடக்கிக் கொள்கின்ற குணத்தையே

குணம் என்க — நல்ல குணமென்று சொல்லவேண்டும். தான் - அசை.

தோ-எ-ய்—நீ ; ப-லை—என்க.

(க - ரை.) கோபத்தை யடக்கிக்கொள்ளுதலே ஒருவர்க்கு நல்ல குணமாம். (அ)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற் - பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து.

பலி ஏல் கடவுள் { (அன்பர்) பூசையைக் கொள்கிற சிவபெருமானுடைய

அவிர் சடைமேல் — விளங்கும் சடையிலிருக்கிற

கட்செவி — பாம்பானது

படர் சிறை அபுள் அரசை } (தன்முன்வந்த) பரந்த சிறகுகளையுடைய அக்கருடனை

பார்த்து அஞ்சாது — கண்டுபயப்படாது; (அதுபோல)

மெலியோர் — வல்லமை யில்லாதவர்

தாம் வலியோர் சேர்ந்தமை மருவில் } தாம் வலியோரைச் சேர்ந்தால்

வலிய விரவலரை அஞ்சார் } பலமுள்ள பகைவர்க்கும் பயப்படார்.

ஏ - அசை.

எ-ய்—மெலியோர்; ப-லை—அஞ்சார்; செ-ள்—விரவலரை.

(க - ரை.) வலி வரைச் சேர்ந்தவர்கள் பகைவர்க்கு அஞ்சார். (௯)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று.

திங்கள் — சந்திரன்

கறை இருளை நீக்கக்கருதாது } தன் களங்கமாகிய இருளை நீக்க நினையாமல்

மேல் நின்று — ஆகாயத்திலிருந்து

உலகில் நிறை இருளை - உலகத்திலே நிறைந்த இருளை

நீக்கும் — நீக்குவான்; (அதுபோல)

விழுமியோர் — பெரியோர்

தம் குறைதீர்வுஉள்ளார்-தங்குறைகள் தீர்தலை நினையாராகி

பிறாக்கு உறும் — பிறர்க்கு வரும்

வெம் குறை — தீய குறைகளை

தளர்ந்து தீர்க்கிற்பாா - மனமிரங்கி நீக்குவர்.

எ-ய்—விழுமியோர்; ப-லை—தீர்க்கிற்பாா; செ-ன்—குறை.

(க-ரை.) பெரியோர் தங் குறைகளைப் பாராட்டாமல் பிறர்க் குறும் குறைகளைத் தீர்ப்பாா. (கo)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந் - துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு.

சூறாவளி போய் — சுழற்காற்றானது சென்று

துப்பில் சிறுபுன் துரும்பு சுழற்றும் — (தனது வலிமையினால்) அற்பமான சிறிய துரும்பை எடுத்துச் சுழற்றும்

கல் தூணை — கற்கம்பத்தை

சுழற்றுங்கொல் — சுழற்றுமோ (சுழற்றமாட்டாது அதுபோ

பொய் புலன்கள் ஐந்தும் — பொய்யாகிய ஐம்புலன்களும் [ல)

புல்லியர்பால் அன்றி - மூடரிடத்திலேயே அல்லாமல்

மெய் புலவர் தம்பால் - மெய்யறிவுடையோரிடத்து

நோய் விளையா — துன்பத்தைச் செய்யா

ஏ - உம் - அசைகள்.

எ-ய்—புலன்கள்; ப-லை—விளையா; செ-ன்—நோய்.

(க-ரை.) ஐம்புலன்களால் மூடரேயன்றிப் பெரியோர் துன் பம் உறார். (கக)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத லேனே புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு.

| | |
|---|---|
| திருந்து இழாய் | திருத்தமாகிய ஆபரணத்தை யுடையவளே ! |
| சீதம் நீர | குளிர்ந்த சலமானது |
| பொள்ளல் சிறு குடத்து | சில்லியையுடைய சிறிய குடத்திலே |
| நில்லாது வீதலோ | நில்லாமல் ஒழுகுதலோ |
| நிற்றல் | நிற்றலே |
| வியப்பு | ஆச்சரியமாகும் ; (அதுபோல) |
| வருந்தும் உயிர | வருந்துகிற உயிரானது |
| ஒன்பான் வாயில் உடம்பில் | ஒன்பது துவாரங்களையுடைய சரீரத்தில் |
| பொருந்துதலே | பொருந்தி யிருத்தலே |
| புதுமை | ஆச்சரியமாகும் ; (நீங்குதல் ஆச்சரியம் அன்று.) |

எ - ய்—பொருந்துதல் ; ப - லை—புதுமை.

(க-ரை.) ஒன்பது துவாரங்களுடைய உடம்பில் உயிர் நிற்றலுக்கு அன்றி நீங்குதலுக்கு ஆச்சரிய மடைதல் பேதைமை. ()

பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் - சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையுளவு நின்ற கதிர்.

உ

| | |
|---|---|
| மலை அளவு நின்ற | மலையி னளவாக நின்ற |
| சுரக்கும் முலை மாதே | (பால்) சுரக்கின்ற முலைகளையுடைய பெண்ணே! |
| மதியின் கதிர் | சந்திரனது கிரணங்கள் |
| கலை அளவு நின்ற | (வளர்தலும் தேய்தலுமான) கலைகளின் அளவாக நின்றன; (அதுபோல) |
| மேலோர் | உயர்ந்தோர் |
| பெருக்கமொடு சுருக்கம் பெற்ற | வளர்தலையுங் குறைதலையும் பொருந்திய |
| பொருட்கு ஏற்ப | செல்வத்துக்குத் தக்கபடி |
| விருப்பமொடு கொடுப்பர் | ஆசையுடன் (இரப்போர்க்குத்) தருவர். |

எ-ய்—மேலோர்; ப-லை—கொடுப்பர்; செ-ள்.—பொருளை.

(க-ரை.) உயர்ந்தோர் தாம் பெற்ற செல்வத்திற்குத் தக்கபடி யாசிப்பவர்களுக்குக் கொடுப்பர்; இழிந்தோர் அப்படிச் செய்யார். (கரு)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த - லிலையா
லிரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

| | |
|---|---|
| இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங் கோதாய் | ஒலிக்கின்ற வண்டுகள் (மகரந்தத்தை) ஊதுகின்ற பூக்களால் ஆகிய குளிர்ந்த மாலையை யுடையவளே! |
| மேரு வரைக்கும் | மேரு மலைக்கும் |

| | |
|---|---|
| வளைவு வந்தன்று | (ஒருகாலத்து) வளைவு வந்தது ; |

[அதுபோலத் தங்கட்கும் வரும் என்று அஞ்சி]

| | |
|---|---|
| தலையாயவா | (அறிவில்) முதன்மையாகியவர் |
| தொலையா பெரு செல்வம் | அழியாத பெரிய செல்வத்திலே |
| தோற்றத்தோம் என்று | பிறந்திருக்கின்றோமென்று நினைத்து |
| செருக்கு சார்தல் இலை | இறுமாப்பு அடைதல் இல்லை. |

ஆல் - அசை.

எ - ய்—சார்தல் ; ப - லை—இலை.

(க - ரை.) பெரியோர் செல்வத்தினால் அகங்காரங் கொள்ளார். (கச)

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும் - நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

| | |
|---|---|
| நல்லாய் | நற்குண முடையவளே ! |
| மொழி இலார்க்கு | பேசுதல்இல்லாத ஊமைகட்கு |
| முது நூல் ஏது | பழமையான சாத்திரம் என்ன பயனைச் செய்யும் ? |
| தெரியும் விழியிலார்க்கு | பார்க்கும் கண்ணில்லாத குருடர்க்கு |
| விளக்கு ஏது | விளக்கு என்னபயனைச் செய்யும் ? (அவை போல) |

| | |
|---|---|
| இங்கு அன்பு இல் லானுக்கு | இவ்வுலகத்தில் அன்பில்லாதவனுக்கு |
| இடம் பொருள் ஏவல் எல்லாம் இருந்தும் | இடம் பொருள் ஏவலாகிய இவை யெல்லாமிருந்தும். |
| அவனுக்கு என் செய்யும் | அவனுக்கு என்ன பயனைச் செய்யும்? |

மற்று - அசை.

தோ - எ - ய்—அவை; ப - லை—என்செய்யும்

(க-ரை.) அன்பில்லாதவன் இடம் பொருள் ஏவல்களுடை யவனாயினும் அவற்றால் தருமத்தையும் புகழையும் அடைய மாட்டான். (கரு)

தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல்.

| | |
|---|---|
| கடல் | பெரிய கடலானது |
| அல்கு கழியினும் செல்லாதோ | சிறிய உப்பங்கழியிலும்போய்ப் பாயா தோ? (பாயும்); (அதுபோல) |
| உயர்ந்தோர் | (அறிவு ஒழுக்கங்களில்) உயர்ந்தவர் |
| தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்து | தங்களையும் தமது மூன்னோரிருப்பையுங் கண்டு |
| தம்மை மதியார் | தம்பெருமையை எண்ணாராகி |
| தமை அடைந்தோர் | தம்மை அடைந்தவர்கள் |

| | |
|---|---|
| தம்மின் இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர் | தம்மிலும் இழிந்தவராயினும் அவரிடத்துப்போய் அவர்துன்பத்தை நீக்குவர். |

எ - ய்—உயர்ந்தோர் ; ப - லை—தீர்ப்பர் ; செ - ள்—இடர்.

(க - ரை.) உயர்ந்தோர் தம்மிலுந் தாழ்ந்தோரிடஞ் சென்று அவர் துன்பத்தை நீக்குவர், இழிந்தோ ரவ்வாறு செய்யார். (கசூ)

**எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்**
**மைந்தர்தம் மீகை மறுப்பரோ - பைந்தொடீஇ**
**நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்**
**கன்று முதவுங் கனி.**

| | |
|---|---|
| பைந்தொடீஇ | பசும் பொன்னாற்செய்த வளையல்களையுடையவளே! |
| நின்று | (பலன் தருமுன் அழிவில்லாமல்)இருந்து |
| பயன் உதவி | பழமாகிய பயனைத் தந்து |
| நில்லா | (அதனாலே பின்பு) அழிவையடைந்த |
| அரம்பையின் கீழ் கன்றும் | வாழையினது கீழிருக்கிற அதன்கன்றும் |
| கனி உதவும் | (பின்) பழத்தைத்தரும்; (அதுபோல) |
| எந்தை | எங்கள் பிதா |
| இரப்பார்க்கு ஈந்து | யாசகர்க்குக் கொடுத்து |
| நல்கூர்ந்தான், என்று | வறியனானான் என்று |
| அவன் மைந்தர் | அவன் புத்திரரும் |
| தம் ஈகை மறுப்பரோ | தமது கொடையை நீக்குவரோ? (நீக்கார்.) |

எ - ப்—மைந்தா ; ப - லை—மறுப்பரோ ; செ - ள்—ஈகை.

(க - ரை.) தந்தை யாசகர்க்குக்கொடுத்துத் தரித்திரனானென்று அவன் பிள்ளைகள் கொடுத்தலை விடார். (கஎ)

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே - பொன்செய்
ததிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

| | |
|---|---|
| பொன் செய்து அதிர் வளையாய் | பொன்னாற் செய்யப்பட்டு ஒலிக்கின்ற வளையல்களையுடையவளே! |
| கடல் | சமுத்திரமானது |
| தண் என் கதிர் வரவால் | குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் வருகையினால் |
| பொங்கும் | பொங்கும் (அதுவன்றி) |
| அழல் கதிரால் | சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியன் வருகையால் |
| பொங்காது | பொங்கமாட்டாது; (அதுபோல) |

இரு நீர் வியன் உலகம் - பெரிய கடல்சூழ்ந்த பரந்த உலகத்தவர்

இன் சொலால் அன்றி - இனிய சொல்லினால் அல்லாமல்

| | |
|---|---|
| என்றும் | எப்பொழுதும் |
| வன் சொலால் மகிழாது | கடுஞ் சொல்லினால் மகிழ்ச்சியை யடையார். |

ஏ - அசை.

எ - ய்—உலகம்; ப - லை—மகிழாது.

(க - ரை.) உலகத்தவர் இன்சொல்லினா லல்லாமல் கடுஞ்சொல்லினால் மகிழார். (கஅ)

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார் - வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

| | |
|---|---|
| தேமா | தித்திப்பு மாமரமானது |
| தென்றல் வர | தென்றற்காற்று வர |
| தளிர் காட்டி திருந்தும் | துளிரைக் காட்டி அழகுபெற்றிருக்கும் |
| சுழல் கால் வர வருந்தும் | சுழல்காற்று வர வருத்தமுறும்; (அது போல) |
| வல்லோர் | (கல்வி கேள்விகளால்) வல்லவர் |
| நல்லோர் வரவால் | நல்லவர் வருகையினால் |
| நகை முகம் கொண்டு இன்பு உறீஇ | முகமலர்ச்சி கொண்டு இன்பம் அடைந்து |
| அல்லோர் வரவால் | தீயவர் வருகையினால் |
| அழுங்குவார் | வருந்துவர். |

எ - ய்—வல்லோர்; ப - லை—அழுங்குவார்.

(க - ரை.) கல்வி யறிவுடையோர் நல்லோர் வருதலினால் மகிழ்ச்சியுந் தீயோர் வருதலினால் மனவருத்தமும் அடைவார்.()

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

| | |
|---|---|
| தெரி இழாய் | ஆராய்ந்தணிந்த ஆபரணத்தையுடையவளே! |

| | |
|---|---|
| மண்டு பிணியால் வருந்து | நெருங்கிய வியாதியினுல் வருந்துகின்ற |
| பிற உறுப்பை | பிற அவயவங்களை |
| கண் கண்டு கலுழும் | கண்கள் பார்த்து அழும்; (அதுபோல) |
| பெரியவர் | (அறிவொழுக்கங்களிற்) பெரியோர் |
| பிறர் நோய் கண்டு | பிறர்க்கு வந்த நோயைப் பார்த்து |
| தம் நோய்போல் | தமக்கு வந்த நோயைப்போலநினைத்து |
| உள்ளம் எரியின் இழுது ஆவர் | மனமானது தீயிற்பட்ட நெய்போல் உருகுவர் |
| என்க | என்று அறியக்கடவாய். |

ஏ - அசை.

எ-ய்—பெரியவர், தோ-எ-ய்—நீ: ப-லை—இழுதாவர், என்க.

(க - ரை.) அறிவொழுக்க முடையோர் இயல்பாகவே பிறர் நோயைக் கண்டு வருந்துவர். (உ0)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையா - மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

| | |
|---|---|
| சுர நீர் மிகை | ஆகாச கங்கையின் பெருக்கமானது |
| எழுத்து அறிவார் ஆயும் | எழுத்துக்களி னியல்பை அறியும் பெரியோர்கள் ஆராய்கின்ற |
| கடவுள் அவிர் சடை | சிவபெருமானது விளங்குகின்ற சடையை |
| முன் கண்ட அளவில் | (தான்) முன் கண்ட வளவில் |
| வீயும் | அடங்கும்; (அதுபோல) |

| | |
|---|---|
| எழுத்து அறிவார் கல்வி பெருக்கம் அனைத்தும் | இலக்கணநூலறியாரது (மற்றைக்) கல்வியின் மிகுதி முழுதும் |
| எழுத்து அறிவார் காணின் | இலக்கணநூல் அறிந்தோரைக் கண்டால் |
| இலையாம் | அழியும். |

எ - ய்—பெருக்கம்; ப - லை—இலையாம்.

(க-ரை.) இலக்கண நூலுணர்ச்சி யில்லாதாரது கல்வி அதை யறிந்தவர் முன் பயன்படாது. (உக)

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

| | |
|---|---|
| அரவின் பரு மணி கண்டு | (நஞ்சுள்ள) பாம்பினிடத்துதித்த பருத்த மாணிக்கத்தைப் பார்த்து |
| நீக்குபவர் ஆர் | நீக்குவோர் யார்? (ஒருவருமில்லை; அன்றியும்) |
| கடலின் கடு என்றும் கவரார் | பாற்கடலில் உண்டான நஞ்சை ஒருநாளும் கொள்ளார்; (அதுபோல) |
| மீ கொள் உயர்வு இழிவு | மேலாகக்கொள்ளும் உயர்வையும் (கீழாகக்கொள்ளும்) இழிவையும் |
| ஆக்கும் அறிவால் அல்லது | நற்குணங்களைச்செய்கிற அறிவினால் அல்லாமல் |
| பிறப்பினால் வேண்டற்க | ஜனனத்தினால் விரும்பாதிருக்கக்கடவீர். |

B. SUBRAHMANYASARMA, TAMIL PANDIT.

தோ - எ - ய்—நீவிர்; ப - லை—வேண்டற்க; செ - ள்—உயாவு, இழிவு.

(க-ரை.) அறிவினால் அல்லாமல் பிறப்பினால் உயாவு தாழ்வுகளை நினையா திருக்கவேண்டும். (உஉ)

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

| | |
|---|---|
| பூரிக்கின்ற முலை பேதாய் | விம்முகின்ற முலைகளையுடைய பெண்ணே! |
| பல கால் எறும்பு ஊர கல் குழியும் | பல தரம் சிற்றெறும்புகள் ஊர்ந்துவந்தாலும் கருங்கல்லும் குழிந்துபோம்; (அதுபோல) |
| மடவார் பகர்ச்சி பயில | பெண்கள் (ஒருவன் பக்கத்தில்) வாய்ப் பேச்சோடு பழகிவந்தாலும் |
| நோன்பு ஆற்றல் | தவஞ் செய்தவினால் |
| திகழ்ச்சி தரும் நெஞ்சம் திட்பம் | விளங்குகின்ற மன உறுதியானது |
| நெகிழ்ச்சி பெறும் | (நாளுக்கு நாள்) தளர்ச்சியை அடையும். |

ஏ - அசை.

எ - ய்—திட்பம்; ப - லை—பெறும்; செ - ள்—நெகிழ்ச்சி.

(க - ரை.) பெண்களது வாய்ப்பேச்சோடு பழகும் பழக்கத்தால் தவசிக்கு மனோதிடங் கெடும். (உங)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்
காக்கை விரும்புங் கனி. [சரு

| | |
|---|---|
| செழும் பொழில் வாய் | செழித்த சோலையினிடத்தில் |
| வண்டு மலர் சேக்கை விரும்பும் | வண்டுகள் பூவாகிய படுக்கையை இச்சிக்கும், |
| வேம்பு அன்றோ | வேப்பங்கனி யல்லவோ |
| காக்கை | காக்கையானது |
| விரும்பும் | இச்சிக்கும் |
| கனி | பழம் ஆம்; (அதுபோல) |
| இங்கு ஒருவர்க்கு குணம் உண்டு எனினும் | இவ்வுலகில் ஒருவருக்கு நற்குண முளதாயினும் |
| கீழ்கொண்டுபுகல்வது | கீழாயினோர் எடுத்துச் சொல்வது |
| அவர் குற்றமே | அவரது குற்றமே. |

எ - ய்—புகல்வது; ப - லை—குற்றம்.

(க - ரை.) மேலோர் ஒருவரிடத்துள்ள குற்றத்தை விட்டுக் குணத்தையே எடுத்துப் பேசுவார், கீழோர் அவர் குற்றத்தையே பகர்வர். (உச)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணுரே - வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

| | |
|---|---|
| வில் ஆர் கணையில் பொலியும் கரு கண்ணாய் | வில்லோடுசேர்ந்த அம்புபோல் (புருவத்தோடு கூடி) விளங்கும் கரிய கண்களையுடையவளே! |
| புணையில் புகும் ஒள் பொருள் | தெப்பத்தில் சேரும் கனத்த பொருள் |
| கொய்தாம் | இலேசாகும்; (அதுபோல) |
| கல்லா அறிவின் கயவர்பால் | கல்லாத அறிவினையுடைய மூடரிடத்தே (சேரின்) |

கற்றுஉணர்ந்த நல்லார் - கற்றறிந்த பெரியோர்

தமது கனம் நண்ணார் - தமது பெருமையை அடையார்.

ஏ - ஈற்றசை.

எ - ய்—நல்லார்; ப - லை—நண்ணார்; செ - ள்—கனம்.

(க-ரை.) கற்றோர் மூடரிடத்தே சென்றால் தமது பெருமையை இழப்பர். (உரு)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் — மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

| | |
|---|---|
| மடவரால் | இளம்பெண்ணே! |
| கதிர் காணும் ஒளி | சூரியகிரணத்துடன் கூடிக் காண்கிற கருமணி யொளியானது |
| கண் அளவு ஆய் நின்றதோ | கண்வரையில் அடங்கி நின்றதோ? (அல்லாமல்) |
| விண் அளவு ஆயிற்றோ | ஆகாயமுழுது நின்றதோ?? |

விளம்பு — நீ சொல்வாயாக;

{ கண்வரையில் அன்றி முழுதும் விரிந்துநிற்பதுபோல, சிறிய வுருவத்தோரும் அறிவினால் உயர்ந்து நிற்பர், ஆதலால் }

ஒள்புலவர்உடலின் சிறுமைகண்டு — ஒள்ளிய புலவரது சரீரத்தின் சிறுமையைக் கண்டு.

கல்விகடலின் பெருமை கடவாா — அவரது கல்வியாகிய கடலின் பெருமையைக் கடக்கமாட்டார்.

தான் - அசை.

தோ-எ-ய்—யாவரும்; ப-லே—கடவார்; செ-ள்—பெருமை.

(க-ரை.) உடம்பின் சிறுமையைக்கண்டு புலவரது கல்வியை யளவிடக் கூடாது. (உசு)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செயவர் - அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

முளைக்கும் எயிறு — முளைக்கின்ற பற்களானவை

நாவிற்கு — { (தமக்கு ஒரு உபகாரமுஞ் செய்ய வியலாத) நாவினுக்கு }

வலியன — வலிய தின்பண்டங்களை

தாம் மென்று — தாம் மென்றுகொடுத்து

முதிர் சுவை விளைக்கும் — முதிர்ந்த சுவை [இன்பத்தைக்] கொடுக்கும்; (அதுபோல)

கற்று அறிந்தோர் — கல்வி யறிவுடையோர்

கைம்மாறு உகவாமல் — பிரதியுபகாரம் விரும்பாமல்

| | |
|---|---|
| **மெய் வருந்தி** | சரீரப் பிரயாசப்பட்டு |
| **தம்மால் இயல் உதவி தாம் செய்வர்** | தம்மால் கூடிய உதவிகளைத் தாங்களே செய்வர். |

அம்மா - வியப்பிடைச்சொல்.

எ - ய்—கற்றறிந்தோர ; ப - லை—செய்வர் ; செ-ள்—உதவி.

(க - ரை.) பெரியோர் பயனை நினையாமல் பிறர்க்குத் தம்மா லியன்ற உதவி செய்வர். (உஎ)

**முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்**
**கனிவினு நல்கார் கயவர் - நனிவிளைவிற்**
**காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்**
**தாயினு மாமோ வறை.**

| | |
|---|---|
| **கதலி** | வாழையானது |
| **கனி விளைவின் காயினும் ஆகும்** | மிக வளர்ச்சியுடைய (பழத்தின் அன்றிக்) காயினும் பயன்படும் |
| **எட்டி பழுத்தாயினும் ஆமோ** | எட்டியானது காயினல் அன்றிப் பழத்தினுலாயினும் (உபயோக) மாகுமோ? |
| **அறை** | (நீ) சொல்வாயாக ; (அவைபோல) |
| **மூதறிஞர்** | பேரறிவுடையோர் |
| **முனிவினும் நல்குவர்** | கோபமுற்றபோதும் கொடுப்பர் |
| **கயவர்** | மூடர் |
| **உள்ளக் கனிவினும் நல்கார்** | மனமகிழ்ந்தவிடத்தும் கொடார். |

தான் - அசை.

எ - ய்—மூதறிஞர், கயவர் ; ப - லை—நல்குவர், நல்கார் ; செ - ள்—ஒன்றை (தொக்கது.)

(க - ரை.) பெரியோர் கோபத்தினுங் கொடுப்பர் ; மூடர் மகிழ்ச்சியினுங் கொடார். (உஅ)

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியை மதிமான்.

| | |
|---|---|
| பண்ணில் புகலும் பனிமொழியாய் | இராகம்போலும் பேசுகின்ற குளிர்ச்சி பொருந்திய சொல்லையுடையவளே ! |
| மதி மான் | சந்திரனிடத்துள்ள மானானது |
| மண்ணில் புலியை | பூமியிலுள்ள புலியைப்பார்த்து |
| அஞ்சுமே | பயப்படுமோ ? (பயப்படாது ;) (அது போல) |
| நெஞ்சு | (தம்முடைய) மனம் |
| ஓங்கு பரத்து உற்றோர் | உயர்ந்த பதியினிடத்தே அழுந்தப்பெற்ற ஞானிகள் |
| உடற்கு வரும் இடர் | உடலைப்பற்றிவருகிற துன்பங்கள் |
| அடுக்கும் ஒரு கோடி ஆக | அடுக்கிச்சொல்லப்பட்ட ஒருகோடி அளவினவாக இருந்தாலும் |
| நடுக்கம் உறார் | அச்சம் அடையார். |

எ - ய்—உற்றோர் ; ப - லை—உறார் ; செ - ள்—நடுக்கம்.

(க-ரை.) ஞானிகள் இடர்களுக்கு அஞ்சார். (உகூ)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொள்வான் குறுகுதன்
முன், உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே - வெள்ளம்,
வருவதற்கு முன்னர ணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு.

| | |
|---|---|
| வெள்ளம் வருவதற்கு முன்னர் | வெள்ளம் வருவதற்கு முன்னே |
| அணைகோலி வையார் | - கரைகட்டி வையார் |
| பெருகுதற்கண் என் செய்வார் | (அது) பெருகிவந்தபோது என்ன செய்வார்கள்? |
| பேசு | நீ சொல்வாயாக; (ஆதலால்) |
| கொள்ளும் கொடு கூற்றம் | (உயிரைக்) கொண்டுசெல்லும் கொடிய யமன் |
| கொல்வான் குறுகுதன் முன் | கொல்லும்படி வருதற்கு முன்னே |
| உள்ளம் கனிந்து | மன நெகிழ்ந்து |
| அறம் செய்து உய்க | தருமங்களைச்செய்து பிழைக்கக்கடவாய் |

ஏ - ஈற்றசை.

தோ - எ - ய் நீ; ப - லை—உய்க.

(க - ரை.) மரணம் வருதற்குமுன் தருமத்தை விரைந்து செய்யல் வேண்டும். (௯0)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

| | |
|---|---|
| நேர் இழாய் | தகுதியாகிய ஆபரணங்களையுடையவளே! |
| மெய் சென்று தாக்கும் வியன் கோல் அடி | உடம்பிற்போய்ப் படுகின்ற நீண்ட கோலின் அடியை |
| கை | கையானது |

| | |
|---|---|
| கடிது சென்று தன் மேல் தாங்கும் | விரைவிற் சென்று தன்மேற்படும்படி ஏற்றுக்கொள்ளும்; (அதுபோல) |
| பேரறிஞர் | பெரிய அறிவையுடையவர் |
| தாக்கும் பிறர் துயரம் | வருத்துகின்ற பிறரது துன்பத்தை |
| வீரமொடு தாங்கி | வீரத்தோடு (தாம்) ஏற்றுக்கொண்டு |
| காக்க விரைகுவார் | (அவரைக்) காப்பதற்கு சீக்கிரம்போவார். |

ஏ - அசை.

எ - ய்—பேரறிஞர் ; ப - லை—விரைகுவார்.

(க - ரை.) பேரறிவுடையோர் பிறர்துன்பத்தை விரைந்து நீக்குவார். (௩௧)

பன்னும் பனுவற் பயன்றே றறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்.

| | |
|---|---|
| நல் நுதால் | நல்ல நெற்றியை யுடையவளே! |
| காழ் ஒன்று | வயிரம் பொருந்திய |
| உயர் திண் கதவு | உயர்ந்த வலிய கதவானது |
| தாழ் ஒன்று இலது ஆயின் | தாள் ஒன்று இல்லாததாயின் |
| வலி உடைத்தோ | வலிமையை உடைத்தாமோ? (உடைத்தாகாது); (அதுபோல) |
| பன்னும் பனுவல் | சொல்லப்படுகிற நூல்களின் |
| பயன் தேர் அறிவு இலார் | பொருளை ஆராயும் அறிவு இல்லாதவரது |
| மன்னும் அறங்கள் | மிகுந்த தருமங்கள் |

| | |
|---|---|
| வலி இலவே | உறுதி யில்லாதனவேயாம். |

தான் - அசை.

எ - ய்—அறங்கள்; ப - லை—இல; செ - ள்—வலி.

(க - ரை.) விதிவிலக்குகளைப் பகுத்தறியும் அறிவில்லாதவர் செய்யுங் கருமங்கள் பயன்படா. (௩௨)

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே - தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

| | |
|---|---|
| நீர் கட்டு குளம் | நீரைக் கட்டிவைத்திருக்குஞ் சிறுகுளம் |
| தள்ளா கரை காப்பு உளது | தள்ளப்படாத கரையாகிய காவலை யுடையது |
| அன்றி | அதுவல்லாமல் |
| கடல் காப்பு உளதோ | சமுத்திரமானது காவலை யுடையதோ? (இல்லை; அவைபோல) |
| இழிஞர் | (அறிவில்லாத) கீழோர் |
| எள்ளாதிருப்ப போற்றற்கு உரியர் | (தம்மைப் பிறர்) இகழாதிருக்கும்படி காக்கப்படுதற்கு உரியவராவர் |
| விள்ளா அறிஞர் | வேறுபடாத அறிவுடைய பெரியோர் |
| அதுவேண்டார் | அதை விரும்பார். |

ஏ - ஈற்றசை.

எ - ய்—அறிஞர், இழிஞர்; ப - லை—வேண்டார், உரியர்; செ - ள்—அது.

(க - ரை.) பிறரிகழாவண்ணங் காக்கப்படுதல் கீழோர்க்கே யன்றி மேலோர்க்கு வேண்டுவதில்லை. (௩௩)

அறிவுடையா ரன்றி யதுபெறுர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு.

பிறை நுதால் பிறைபோலும் நெற்றியை யுடையவளே!
வண்ணம் செய் அழகு செய்கின்ற
வாள் விழியே அன்றி-ஒளிபொருந்திய கண்களேயல்லாமல்
மறை குருடு கண் ஒளிமறைந்த குருட்டுக்கண்கள்
இருளை கண்டு இருட்டைக்கண்டு
அஞ்சுமோ அஞ்சுமோ? அஞ்சா; (அவைபோல)
அறிவு உடையார் அன்றி } அறிவுடையவரே அல்லாமல்
அது பெறுர் அவ்வறிவைப் பெறுத மூடா
தம்பால் செறி பழியை } தம்மிடத்து வரும் பழிக்கு
சிறிதும் அஞ்சாா சிறிதும் பயப்படார்.

எ - ய்—பெறுர்; ப - லை—அஞ்சார்.

(க-ரை.) பழிக்கு விவேகிகள் அஞ்சுவர், மூடர் அஞ்சார். ()

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரே - வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

வெற்றி நெடு வேல் வெற்றியையுடைய நெடிய வேற்படை
வேண்டும் வாள் விழியாய் } விரும்புகின்ற ஒள்ளிய கண்களை யுடையவளே!

| | |
|---|---|
| வாழை பழம் பால் வேண்டும் | வாழைப்பழத்தை (மதுரமுள்ள) பால் விரும்பும்; |
| புளி காடி வேண்டா | புளித்த காடிநீரானது (அப்பழத்தை) வேண்டாவாம்; (அவைபோல) |
| கற்ற அறிவினரை | கற்ற கல்வியறிவுடையாரை |
| மேன்மக்கள் காமுறுவர் | மேலோர் விரும்புவர் |
| மற்றையர் என்றும் மதியார் | மூடர் எக்காலத்திலும் (அவரை) மதியார். |

தாம், ஏ - அசைகள்.

எ - ய்—மற்றையர், மேன்மக்கள்; ப - லை—மதியார், காமுறுவா; செ - ள்—அறிவினரை.

(க-ரை.) கற்றவரை மேலோர் அன்றி மூடா விரும்பார். ()

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ - ரெக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

| | |
|---|---|
| எக்காலும் | எப்பொழுதும் |
| நீா நெல்லுக்கு இறைப்பதே அன்றி | நீரை நெல்லுக்கு இறைப்பதே அல்லாமல் |
| காட்டு முளி புல்லுக்கு | காட்டினிடத்தே உலரும் புல்லுக்கு |
| போய் இறைப்ப ரோ | போய் இறைப்பார்களோ? இறையார்; (அதுபோல) |
| தக்கார்க்கே ஈவர் | யோக்கியருக்கே கொடுப்பர்; |

| | |
|---|---|
| தகார்க்கு அளிப்பார் இல்லென்று | அயோக்கியருக்குக் கொடுப்பார் இல்லை யென்று (அறிந்து) |
| விழுமியோர் | மேலோர் |
| மிக்கார்க்கு உதவார் | நன்னெறி கடந்த அயோக்கியருக்குக் கொடார். |

எ - ய்—விழுமியோர் ; ப - லை—ஈவர்; உதவார். செ - ள்—பொருளை (தொக்கது.)

(க - ரை.) பெரியோர்கள் யோக்கியர்களுக்கே யல்லது அயோக்கியர்களுக்குக் கொடார். (௩௪)

பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும் - தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வி தீர்ந்தன்று தாழ்ந்து.

| | |
|---|---|
| பொன் உயர்வு தீர்த்த | திருமகளின் உயர்வை (அழகினாலே) நீக்கிய |
| புணர் முலையாய் | நெருங்கிய முலைகளை யுடையவளே ! |
| விந்த மலை | விந்தம் என்னு மலையானது |
| தாழ்ந்து | (அகத்திய முனிவர் கையினாலே ஊன்றப் பாதலத்திலே) தாழ்தலையுற்று |
| தன் உயர்வு | தன் பெருமையை |
| தீர்ந்தன்று | இழந்தது |
| தெரியாய்கொல் | (நீ அதனை) அறியாயோ ? (அதுபோல) |
| பெரியோர் முன் | பெரியவர் முன்னே |

தன்னை புனைந்து உரைத்த பேதை } தன்னைச் சிறப்பித்துச் சொல்லிக்கொண்ட மூடன்

உயர்வு தரியாது — உயர்வைப் பெறாமல்

அகன்று தாழும் — நீங்கித் தாழ்வை யடைவன்.

எ - ய்—பேதை ; ப - லை—தாழும்.

(க - ரை.) பெரியோர்முன் தன்னைச் சிறப்பித்துச் சொல்பவன் தாழ்வை யடைவான். (௩௭)

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே - நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

நல்லாய் கேள் — நற்குண முடையவளே! கேட்பாயாக

காய் முற்றின் தின் தீம் கனி ஆம் } காயானது (நாள்சென்று) முற்றினால்தின்னுதற்குரிய மதுரமான கனியாகும்;

இளம் தளிர் நாள் போய் முற்றின் } இளந் தளிரானது நாள் சென்று முற்றினால்

என் ஆகிப் போம் — யாதாகிப் போகும்? (அவைபோல),

நல்லார் செயும் கேண்மை } நல்லோர் செய்கிற சிநேகம்

நாள் தோறும் நன்று ஆகும் } தினந்தோறும் நன்றாகி வளரும்;

அல்லார் செயும் கேண்மை } மூடர் செய்யும் சிநேகம்

ஆகாது — நல்ல தாகாது.

ஏ - ஈற்றசை.

எ - ய்—கேண்மை, கேண்மை; ப - லை—நன்றாகும், ஆகாது.

(க - ரை.) நல்லோர் சிநேகம் தினந்தோறும் இனிதாய் வளரும்; மூடர் சிநேகம் அவ்வாறாகாது கெடும். (கஅ)

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே - பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம்.

பொன் தொடீ — பொன் வளையல்களை யுடையவளே!

சென்று படர்ந்த செழுங் கொடி மென் பூ — போய்ப் பரவிய செழிப்பாகிய கொடியினுடைய மிருதுவான பூவானது

மலர்ந்த அன்றே — மலர்ந்த அன்றைக்குமாத்திரமே;

மணம் உடையது ஆம் - வாசனை யுடையதாம்;

[மறுநாள் அம்மணங் கெடுதல்போல]

கற்று அறியார் செய்யும் கடு நட்பும் — மூடர் செய்கிற மிகுதியாகிய சிநேகமும்

தாம் கூடி உற்றுழியும் — (நெடுங்காலம்) தாங்கள் கூடியிருந்த இடத்தும்

தீமை நிகழ்வே உள்ளது — பொல்லாங்கு விளைதலே உள்ளதாகும்.

எ - ய்—நட்பு; ப - லை—உள்ளது; செ - ன்—நிகழ்வு.

(க-ரை.) மூடர் சிநேகம் தொடக்கத்தில் நன்றாயினும் பின்பு தீமையைத் தரும். (௩௯)

**பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி**
**மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார் - மின்னுமணி**
**பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்**
**காணுங்கண் ணொக்குமோ காண்.**

| | |
|---|---|
| பொன்னே | இலக்குமியைப் போன்றவளே! |
| மின்னும் அணிபூணும் | மின்னுகின்ற ஆபரணத்தை அணியும் |
| பிற உறுப்பு | (கை கால் முதலிய) மற்ற அவயவங்களானவை |
| அது புனையா | அதனை யணியாத |
| காணும் கண் | பார்க்கின்ற கண்களுக்கு |
| ஒக்குமோ | ஒப்பாகுமோ? ஒப்பாகா; (அதுபோல), |
| பொன் அணியும் வேந்தர் | பொன்னாபரணங்களைத் தரித்த அரசர்கள் |
| புனையாத | அதனை அணியாத |
| பெரு கல்வி மன்னும் அறிஞரை | மிக்க கல்விப்பொருள் நிலைபெற்ற அறிவுடையாரை |
| ஒவ்வார் | ஒப்பாகார். |
| | தாம், மற்று - அசை; |
| | காண் - முன்னிலையசை. |

**எ - ய்—வேந்தர்; ப - லை—ஒவ்வார்; செ - ள்—அறிஞரை.**

**(க-ரை.) அரசர்கள் கல்வியறிவுடையோரை ஒவ்வார். (௪௦)**

**நன்னெறி முற்றிற்று.**